


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது

# தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 118 | 4 Pages | 27.11.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 03 | இதழ்: 118 | 4 பக்கங்கள் | 27.11.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழுந் தரும்**

**விளக்கம்:**
**மனதின் நன்மை உயிர்க்கு ஆக்கமாகும், இனத்தின் தன்மை (அவ்வளவோடு நிற்காமல்) எல்லாப் புகழையும் கொடுக்கும்.**

# திமுக ஆட்சியையும், தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் பிரிக்க முடியாது; முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

கோவை, நவ.27

தமிழக பொருளாதாரத்தில் கோவை மாவட்டம் முக்கிய பங்களிப்பு செய்து வருகிறது . தொழில் நகரான கோவை தற்போது கல்வி, மருத்துவம், சுற்றுலா, தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேசிய அளவில் மட்டுமின்றி உலகளவிலும் புகழ் பெற்று விளங்குகிறது.

கோவை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதுதவிர தொழில்துறையில் சிறந்து விளங்கும் கோவை மாவட்டத்திற்கு மேலும் பல்வேறு நிறுவனங்கள் தொழில் தொடங்கும் வகையில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த 2021 நவம்பர் 23ந் தேதி கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற மாநாட்டில் ரூ.34,723 கோடி முதலீட்டில் 74 ஆயிரத்து 835 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் வகையில் 52 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் கோவை அவினாசி சாலை யில் உள்ள தனியார் ஓட்டலில்தமிழ்நாடு தொழில்துறை சார்பில் 3வது தமிழ்நாடு வளர்கிறது (டி.என்.ரைசிங்) முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்தார்.

அமைச்சர் முன்னிலையில் இந்த மாநாட்டில் முதல் ரூ.43 ஆயிரத்து 844 கோடி முதலீட்டில் புதிய தொழில்களுக்கான 158 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இதன் மூலம் 1 லட்சத்து 709 இளைஞர்களுக்கு

வேலை வாய்ப்புகள் கிடைக்கும். மேலும் இதன் மூலம் கோவை மண்டலம் தொழில்துறையில் சிறந்து விளங்கும் என்றும் தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் எனவும் தொழில்துறையினர் தெரிவித்தனர். இந்த மாநாட்டில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

கோவையில் நடைபெறும் டி. என்.ரைசிங் முதலீட்டாளர்கள் மாநாடு 2025 நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றியதாவது:

ஜி.டி.நாயுடு, பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றோர் புது முயற்சிகளுக்கு பெயர் பெற்றவர்கள். கோவை மக்கள் தொடர்ந்து எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். அரசின் ஆதரவு எப்போதும் தொழில் துறையினருக்கு உண்டு.

தென் இந்தியாவின் மான்செஸ்டராக கோவை மாவட்டம் விளங்குகிறது. தென் இந்தியாவின் மான்செஸ்டர் கோவைக்கு முதல் அமைச்சரான பின் 15க்கும் மேற்பட்ட முறை வந்துள்ளேன். கோவை



மக்களுக்காக தொடர்ந்து உழைப்போம்.

ரூ.43,844 கோடி முதலீட்டில் 1,00,709 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 158 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. தூத்துக்குடியில் ரூ.32,000 கோடிக்கும் ஒசூர் முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.24,000 கோடிக்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. 25 ஆண்டுகள் முன்கூட்டியே தொலைநோக்குடன் சிந்தித்து செயலாற்றி வருகிறோம். திமுக ஆட்சியையும் தமிழக வளர்ச்சியையும் பிரிக்க முடியாது. இந்தியாவில் முதல் முறையாக 1997ல் ஐடி. கொள்கையை கொண்டு வந்தது திமுக அரசு தான். கோவை மக்களுக்காக தொடர்ந்து உழைப்போம். ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு நானே சென்று தொழில் முதலீட்டை ஈர்த்தேன். தமிழ்நாடு முழுவதும் சீரான வளர்ச்சி என்ற இலக்குடன் திராவிட மாடல் அரசு செயல்படுகிறது. இந்த முதலீட்டாளர் மாநாடு வளர்ச்சிக்கான தொடக்கம் மட்டும்தான். தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் திட்டங்களுக்கு எந்த தாமதமும் ஏற்படாது. தமிழ்நாட்டில் தொழில், முதலீடுகள் செய்ய உகந்த சூழல், அரசு வெளிப்படைதன்மையுடன் செயல்படுகிறது.


கடந்த ஆட்சியில் 62,000 நிறுவனங்கள் இருந்த நிலையில் திமுக ஆட்சியில் 72 ஆயிரத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. அதிமுக ஆட்சியைவிட இரண்டரை மடங்கு அதிக முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.

2021ல் திமுக ஆட்சிக்கு வரும் போது 62,413 நிறுவனங்கள் தமிழ் நாட்டில் இருந்தன. தற்போது 79,185 ஆக உயர்ந்துள்ளது. 41/2 ஆண்டுகளில் 29.69 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துள்ளதாக மத்திய அரசின் PF பி.எப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளோட போட்டி போட்டு முதலீடுகளை கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டுக்கு கிடைத்த முதலீடுகளைதாங்கிக்கொள்ள முடியாத சிலர் பொய் செய்திகளை பரப்புகின்றனர். தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 12,663 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கோவை, சூலூர், பல்லடத்தில் செமி கண்டக்டர் பூங்காக்கள் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 80 சதவீதம் நிறைவேற்றப்பட்டு விட்டன.

இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி கார் வெடிப்பு: சூட்கேசில் வெடிபொருட்களை கொண்டு சென்ற டாக்டர் உமர் பரபரப்பு தகவல்



புதுடெல்லி, நவ.27

டெல்லி செங்கோட்டை எதிரே கடந்த 10ந்தேதி நடந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் குறித்து முதலில் டெல்லி போலீசார் விசாரணை நடத்தினார்கள். பின்னர் உள்துறை மந்திரி அமித்ஷா உத்தரவைத் தொடர்ந்து தேசிய புலனாய்வு முகமையினர் இந்த வழக்கை விசாரித்து வருகிறார்கள்.

இந்த வழக்கில் இதுவரை 4 டாக்டர்கள் உள்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கார் வெடிப்பு சம்பவத்தை தலைமை தாங்கி நடத்திய டாக்டர் உமர் முகமது சம்பவ இடத்திலேயே தற்கொலை குண்டாக பலியாகி விட்டார். இது டி.என்.ஏ. பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில், டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் பலியான பயங்கரவாதி டாக்டர் உமர் பற்றி பல்வேறு புதிய தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அதன்படி, வெடிகுண்டு பரிசோதனைகளில் அவர் மிகவும் கைதேர்ந்தவர் என சக பயங்கரவாதிகள் போலீசில் தெரிவித்துள்ளனர். வெடிகுண்டு விவகாரங்களில் தன்னை ஒரு ராஜாவாகவே அவர் கருதுவார் என அவர்கள் கூறியுள்ளனர்.

எங்கு சென்றாலும் ஒரு சூட்கேசை கையில் வைத்திருப்பார் என்றும், அதில் வெடி மருந்துகள், அதை வெடிக்கச் செய்வதற்கான பிற கலவைகள் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஒரு நடமாடும் வெடிகுண்டு நிலையமாகவே அவர் இருந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. இந்த செயலில் அவர் இறங்காவிட்டால் ஒரு மிகப்பெரிய அணுகுண்டு விஞ்ஞானியாக மாறியிருப்பார் என்று மற்றொரு பயங்கரவாதி முஷாமில் ஷகீல் அதிகாரியிடம் கூறியுள்ளார். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## புதுச்சேரியில் டிசம்பர் 5ந் தேதி விஜய் சாலை வலம்: அனுமதி கேட்டு டி.ஜி.பி.யிடம் மனு

புதுச்சேரி, நவ.27

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற



இருக்கிறது. இதில், முதல் முறையாக நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும் களம் இறங்க இருக்கிறது.

இதனால், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தமிழகத்தில் மக்கள் சந்திப்பு இயக்கத்தை நடத்தினார். இதில், கட்டுக் கடங்காத கூட்டம் வந்த நிலையில், கரூர் நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து, மக்கள் சந்திப்பு இயக்கத்துக்கு போலீசார் அனுமதி மறுத்தனர். இதனால், கடைசியாக காஞ்சீபுரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு இயக்கம் அரங்க நிகழ்ச்சியாகவே நடந்தது. இதில், 2 ஆயிரம் பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், டிசம்பர் 5ந் தேதி புதுச்சேரியில் சாலை வலமாக (ரோடு ஷோ) சென்று மக்கள் சந்திப்பை மேற்கொள்ள விஜய் திட்டமிட்டுள்ளார். தமிழ்நாட்டில் இதற்கு தடை இருந்தாலும், அண்டை மாநிலமான புதுச்சேரியில் இதற்கு அனுமதி கிடைக்கும் என்று அக்கட்சி நிர்வாகிகள் நம்புகின்றனர்.

இந்நிலையில் விஜய்யின் சாலை வலத்திற்கு அனுமதி கேட்டு தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் புதுச்சேரி டி.ஜி.பி. அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

இதுதொடர்பான அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

எங்கள் கழகத் தலைவர் விஜய் அவர்கள் சாலை மார்க்கமாக காலாப்பட்டில் தொடங்கி அஜந்தா சிக்னல், உப்பளம் வாட்டர் டேங்க், மரப்பாலம், அரியாங்குப்பம். தவளகுப்பம், கிருமாம்பாக்கம், கன்னியக்கோவில் வழியாக வருகை பரிந்து மக்களை சந்திக்க உள்ளார். இந்த சந்திப்பின் போது கீழ் கண்ட இடத்தில் ஒலிப் பெருக்கியின் மூலமாக உரையாட உள்ளார் ஆகையால் இந்த நிகழ்ச்சிக்கு தேவையான பாதுகாப்பை வழங்கி எங்கள் கழகத் தலைவரின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: 05.12.2025, வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

தலைவர் உரையாற்றும் இடம்: உப்பளம், சோனாம்பாளையம் வாட்டர் டேங்க் அருகில்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியின்போது நிர்வாணமாக நின்ற அலுவலர் வீடியோ வெளியாகி பரபரப்பு

திருவனந்தபுரம், நவ.27

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள தவனூர் மண்டலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒருவர் ஈடுபட்டிருந்தார். வாக்காளர்களிடம் படிவங்களை பூர்த்தி செய்யும்போது பொது இடத்தில் அவர் திடீரென தனது ஆடையை களைந்து நிர்வாணமாக நின்று உள்ளார். இதைப்பார்த்து அங்கிருந்த பெண்கள் உள்ளிட்ட அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த சம்பவம் கடந்த வாரம் நடந்துள்ளது. இதுதொடர்பான வீடியோ காட்சிகள் நேற்று டி.வி. சேனல்களில் வெளியாகின. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுத்தது.

உடனடியாக அந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் தீவிர திருத்தப் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். மேலும் பொதுவெளியில் அநாகரிகமாக நடந்து கொண்டது தொடர்பாக அவருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு சட்ட தின கொண்டாட்டம்

திருநெல்வேலி மாவட்டம் பேட்டை காமராஜர் நகர் மன்றம் மேல்நிலைப் பள்ளியில் தேர்தல் கல்வியறிவு குழு சார்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76 வது ஆண்டு முன்னிட்டு பள்ளியில் அரசியலமைப்பு நெறிமுறைகள் குறித்த நிகழ்ச்சி நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை இவாஞ்சலின் தலைமை தாங்கினார் பள்ளியின் முதுகலை வரலாறு ஆசிரியர் திரு தனுஷ்கோடி அவர்கள்அரசியலமைப்பு சட்ட தினம் குறித்து அதன் பெருமைகள் குறித்தும் சிறப்புரையாற்றினார் பட்டதாரி வரலாறு ஆசிரியர் திரு பக்கீர் மொகிதீன் கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்து சிறப்புரையாற்றினார் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தேர்தல் கல்வியை குழு பொறுப்பாளரும் முதுகலை பொருளாதார ஆசிரியருமான பொன்னுசாமி செய்திருந்தார்




## கவர்னர் ஆர்.என்.ரவி, மார்க்ஸை விமர்சிப்பதற்கு தகுதியற்றவர் இந்திய கம்யூ. கட்சி கண்டனம்

சென்னை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடுமாநிலசெயலாளர்மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் திருப்பதாவது:



நேற்றைய தினம் கவர்னர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி, கார்ல் மார்க்ஸை பின்பற்றியவர்கள் இந்திய நாகரிகம், கலாச்சாரத்தை அழித்துவிட்டனர் என்று அநாகரிகமாக பேசியுள்ளார். இந்தியாவின் பன்முகத்தன்மையையும், பல மொழிகள் பேசும் மக்களின் கலாச்சாரத்தையும் அழித்தொழிக்க முயலும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் சித்தாந்தத்தை பின்பற்றும் ஆர்.என்.ரவி இத்தகைய குற்றச்சாட்டை கார்ல் மார்க்ஸ் மீது வைத்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

காரல் மார்க்சுக்கு எதிரான வெறுப்பை தொடர்ந்து கக்கிவரும் கவர்னர் ஆர்.என்.ரவி, கம்யூனிச எதிர்ப்பு பித்தம் தலைக்கேறியவராய் உண்மைக்கு மாறான கருத்துகளை உளறி கொட்டிக் கொண்டிருக்கிறார். கார்ல் மார்க்ஸ் தனது மூலதன நூலில் "ஏகாதிபத்திய கொள்கைக்கு நான் எதிரானவன். ஆனால், இந்தியாவுக்கு ஏகாதிபத்தியம் தேவை" என்று குறிப்பிட்டிருக்கிறார் என ஆர்.என்.ரவி கூறியுள்ளது மிகவும் அபத்தமானது.

கார்ல் மார்க்ஸ் தனது படைப்புகளில், பிரிட்டிஷ் ஆட்சியின் அட்டூழியங்கள், சுரண்டல், இந்திய பொருளாதாரத்தை சீர்குலைத்தது போன்றவற்றை மிக கடுமையாக விமர்சித்துள்ளதை கவர்னர் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து, 1853ம் ஆண்டு, நியுயார்க் டெய்லி டிரிபியூனுக்கு எழுதியக் கட்டுரையில், இந்தியாவின் விடுதலையை மார்க்ஸ் ஆதரித்திருக்கிறார்.

"ஆங்கிலேய முதலாளிகள் நிர்பந்தத்தால் எடுக்கும் நடவடிக்கைகள் இந்திய மக்களுக்கு விடுதலையை கொடுக்காது அல்லது இந்திய மக்களின் சமூக நிலையில் குறிப்பிடத்தக்க மாறுதலையும் ஏற்படுத்தப் போவதில்லை. இந்திய மக்களின் விடுதலையும் முன்னேற்றமும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் அவைகளை பொது மக்கள் தங்கள் உடமையாக பெறுவதையும் பொறுத்திருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது இந்தியாவின் விடுதலை என்பதே ஒரு பொதுவுடைமை அடிப்படையிலான விடுதலையாக இருக்க வேண்டுமென கார்ல் மார்க்ஸ் 1853களிலேயே தெளிவாகக் கூறியுள்ளார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறிதளவும் பங்கெடுக்காத ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் வாரிசான ஆர்.என்.ரவி, இந்திய விடுதலையை ஆதரித்த மார்க்ஸை விமர்சிப்பதற்கு தகுதியற்றவர். ஆர்.என்.ரவி ஏற்றுக் கொண்டுள்ள சனாதன தர்மக்கோட்பாடு, அவரை, கார்ல் மார்க்ஸ் இந்திய விடுதலைக்காக குரல் கொடுத்தவர் என்பதை ஏற்க மறுக்கச் செய்கிறது. உண்மைகளை மறைக்கச் செய்கிறது.

பிராமண மேலாதிக்கத்தையும், சாதிய ஏற்றத் தாழ்வையும், சாதி அடிப்படையிலான பரம்பரை குலத் தொழிலையும், ஆணாதிக்கத்தையும் தாங்கிப்பிடிக்கும், சனாதன தர்மத்தை உயர்த்திப்பிடிக்கும் கவர்னர் ரவிக்கு சமத்துவம் என்பதும், பொதுவுடைமை என்பதும் எட்டிக்காயாகவே கசக்கும். இந்திய உழைக்கும் மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் எதிரான சனாதன தர்மக் கோட்பாடு, சமூகக் கட்டமைப்பு சமூகப் பொருளாதார மாற்றங்களால், கம்யூனிஸ்ட்டுகள், திராவிட இயக்கங்கள், அம்பேத்கரிஸ்ட்டுகள் உள்ளிட்ட முற்போக்கு சக்திகளின் செயல்பாட்டால் தகர்ந்து வருகிறது.

இதை சகித்துக் கொள்ள முடியாத சனாதனதர்ம காப்பாளாரக செயல்படும் ஆர்.என்.ரவி பதறுகிறார். இந்தியாவின் கலாசாரமே அழிக்கப்படுவதாக கூக்குரலிடுகிறார். எத்தனை ஆர்.என். ரவிகள் வந்தாலும், சனாதன தர்ம கலாச்சாரம் வீழ்வதையும், முற்போக்கு கலாசார மாற்றங்கள் நிகழ்வதையும் தடுத்துவிட முடியாது. கம்யூனிச எதிர்ப்பு நஞ்சை கக்கும் ஆர்.என்.ரவிகளின் மக்கள் ஒற்றுமையை கெடுக்கும் சதிகளை, தமிழக மக்கள் முறியடிப்பார்கள்.

இங்கிலாந்து நாட்டின் ஒளிபரப்பு நிறுவனம் 2000மாவது ஆண்டில் நடத்திய ஆய்வில், "கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தலைசிறந்த பேரறிவாளர் கார்ல் மார்க்ஸ்" என அறிவித்ததை உலகம் கொண்டாடியது. அத்தகைய மாமேதை மார்க்சை ஆர்.என்.ரவிகள் சிறுமைப்படுத்த முயல்வது வெற்றி பெறாது. மார்க்சின் புகழ் என்றும் நீடித்து நிலைத்திருக்கும். மார்க்சியமே வெல்லும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



தினகனி


# இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை காக்க உறுதியேற்போம்: விஜய்



சென்னை, நவ.27

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

நம் கொள்கைத் தலைவர் அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான குழு, உலகத்திலேயே மிகச் சிறந்த அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றி நமக்கு அளித்துள்ளது. இதில் இறையாண்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. பல்வேறு மொழி, இனம், கலாசாரங்களுக்கு ஒத்த மதிப்பு அளித்து, மதச்சார்பின்மை காத்துள்ளது.

பூரண ஜனநாயகத்துடன் வேற்றுமையில் ஒற்றுமை காண வழி வகை செய்துள்ளது. அண்ணலின் அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்ட தினத்தை இந்திய அரசியல் சாசன தினமாகக் கொண்டாடுகிறோம். இந்த நாளில், இந்திய அரசியலமைப்பின் மாண்பையும் அது நமக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையும் காக்க உறுதியேற்போம்! என தெரிவித்துள்ளார் .

# கார்த்திகை தீபத் திருவிழா: திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில்கள் இயக்கம்



சென்னை, நவ.27

கார்த்திகை தீபத்தை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளன. அதன் விவரம் வருமாறு:

★ திருநெல்வேலி ரெயில் நிலையத்தில் இருந்து திருவ ண்ணாமலைக்கு வருகிற 3ந் தேதி இரவு 9.30மணிக்குசிறப்பு ரெயில் புறப்பட்டு கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், அருப்புகோட்டை, மானாமதுரை, காரக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, விருதாச்சலம், விழுப்புரம் வழியாக திருவண்ணாமலைக்கு 4ந் தேதி காலை 8.30 மணிக்கு வந்தடைகிறது.

பின்னர் அந்த ரெயில் 4ந் தேதி இரவு 7.55 மணிக்கு திருவண்ணாமலை ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு விழுப்புரம், விருதாச்சலம், திருச்சி, புதுக்கோட்டை, காரக்குடி, மானாமதுரை, அருப்புகோட்டை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி வழியாக 5ந் தேதி காலை 8.30 மணிக்கு திருநெல்வேலியை சென்றடைகிறது.

★ சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு வருகிற 3ந் தேதி காலை 9.15 மணிக்கு பெரம்பூர், திருவள்ளூர், அரக்கோணம், சோளிங்கர், காட்பாடி வழியாக திருவண்ணாமலைக்கு மதியம் 1.20 மணிக்கு வருகிறது.

பின்னர் அந்த ரெயில் திருவண்ணாமலையில் இருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு விழுப்புரம்,திண்டிவனம், மேல்மருவத்தூர், செங்கல்பட்டு,தாம்பரம்,சென்னை எழும்பூர் வழியாக இரவு 7 மணிக்கு சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தை அடைகிறது. இதேபோல் இந்த ரெயில் 4ந் தேதியும் இயக்கப்படுகிறது.

★ விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு வருகிற 30, 3, 4 மற்றும் 5 ஆகிய 4 நாட்கள் மெமு விரைவு சிறப்பு ரெயில் இயக்கப்பட உள்ளது. விழுப்புரத்தில் இருந்து மேற்கண்ட நாட்களில் காலை 10.10 மணியளவில் புறப்பட்டு வெங்கடேசபுரம், மாம்பலப்பட்டு, அயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சநல்லூர், அண்டம்பள்ளம், தண்டரை வழியாக திருவண்ணாமலைக்கு பகல் 11.45 மணிக்கு வந்தடைகின்றது.

பின்னர் அந்த ரெயில் திருவண்ணாமலையில் இருந்து மதியம் 12.40 மணிக்கு புறப்பட்டு தண்டரை, அண்டம்பள்ளம், ஆதிச்சநல்லூர், திருக்கோவிலூர், அயந்தூர், மாம்பலப்பட்டு, வெங்கடேசபுரம் வழியாக மதியம் 2.15 மணிக்கு விழுப்புரம் சென்றடைகின்றது.

★ இதேபோல் மற்றொரு மெமு சிறப்பு ரெயில் விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலை வழியாக வேலூர் கண்டோன்மெண்ட் ரெயில் நிலையம் வரை இயக்கப்படுகிறது. இந்த ரெயில் 3ந் தேதி இரவு 10.40 மணிக்கு விழுப்புரத்தில் இருந்து புறப்பட்டு நள்ளிரவு 12.15 மணிக்கு திருவண்ணாமலைக்கு வருகிறது. பின்னர் அந்த ரெயில் அங்கிருந்து 4ந் தேதி அதிகாலை 1.45 மணிக்கு வேலூர் கண்டோன்மெண்ட் ரெயில் நிலையத்தை அடைகிறது. அதனை தொடர்ந்து வேலூர் கண்டோன்மெண்ட் ரெயில் நிலையத்தில் இருந்து 4ந் தேதி காலை 2.05 மணிக்கு புறப்பட்டு திருவண்ணாமலைக்கு அதிகாலை 3.20 மணிக்கு வருகிறது. பின்னர் அந்த ரெயில் அங்கிருந்து புறப்பட்டு விழுப்புரத்திற்கு அதிகாலை 5 மணிக்கு சென்றடைகிறது. இதேபோல்இந்தசிறப்புரெயில் 3ந் தேதி முதல் 6ந் தேதி வரை தொடர்ந்து இயக்கப்பட உள்ளது.

★ தாம்பரத்தில் இருந்து வருகிற டிசம்பர் 3,4 ஆகிய தேதிகளில் காலை 9.15 மணிக்கு புறப்பட்டு திருவண்ணாமலை செல்லும் முன்பதிவில்லாத சிறப்பு ரெயில் (06049), அதே நாள் மதியம் 1.30 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும். மறுமார்க்கமாக, திருவண்ணாமலையில் இருந்து வருகிற டிசம்பர் 3,4 ஆகிய தேதிகளில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் முன்பதிவில்லாத சிறப்பு ரெயில் (06050), அதே நாள் இரவு 9 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

இந்த ரெயில்களுக்கான முன்பதிவு இன்று (வியாழக்கிழமை) காலை 8 மணிக்கு தொடங்க உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'எந்த நாட்டிற்கும் கிடைக்காத சிறப்பான அரசியலமைப்புச் சட்டம் நமக்கு கிடைத்திருக்கிறது' அன்புமணி ராமதாஸ்



சென்னை, நவ.27

இந்திய அரசியலமைப்பு சட்ட நாளில் அது காட்டும் நல்வழிகளை பின்பற்றி, சமூகநீதி, அடிப்படை உரிமைகளை உறுதி செய்வோம் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில்,


'இந்தியாவில்அனைத்து அமைப்புகளையும் விட வலிமையானதும், உயர்ந்ததும் அரசியலமைப்பு சட்டம் தான். அண்ணல் அம்பேத்கரால்வகுக்கப்பட்டு, இந்திய அரசியல் சட்ட அவையால் 1949ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் 76ஆம் ஆண்டு இன்று கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகில் எந்த நாட்டிற்கும் கிடைக்காத சிறப்பான அரசியலமைப்புச் சட்டம் நமக்கு கிடைத்திருப்பது நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு நாம் செலுத்தும் மரியாதை என்னவென்றால்,

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தி, அனைவருக்கும் சமூகநீதி வழங்கி, அடிப்படை உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்வது தான். அதற்காக அறவழியிலும், அரசியல் வழியிலும் உழைப்போம்' இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

# தண்ணீர் தொட்டியில் வீசி 3 மாத பெண் குழந்தை கொலை... கொடூர தாய் அளித்த அதிர்ச்சி வாக்குமூலம்



ஆம்பூர், நவ.27

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சி டவுன் ரெட்டி தோப்பு பகுதியை சேர்ந்தவர் அக்பர் பாஷா (வயது 26). இவர் துத்திப்பட்டு பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலையில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி அஸ்லியா தஸ்மின் (23). இவர்களது மகள்கள் அபிமா பாத்திமா (வயது 5), ஹர்பா பாத்திமா (3 மாதம்). மகன் முகமது அதினான் (2). இவர்கள் அதே பகுதியை சேர்ந்த ஆஷியா என்பவரது வீட்டின் மேல் மாடியில் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர்.

நேற்று காலை அக்பர் பாஷா வழக்கம்போல் வேலைக்கு சென்று விட்டார். அதன்பின் மனைவி அஸ்லியா தஸ்மின், குழந்தைகளுடன் வீட்டில் இருந்துள்ளார். மதியம் 12 மணியளவில் வீட்டில் இருந்த 3 மாத பெண் குழந்தை ஹர்பா பாத்திமாவை காணவில்லையென கூறி தாயார் அஸ்லியா தஸ்மின் கீழ் வீட்டிற்கு வந்து உரிமையாளர் ஆஷியாவிடம் கேட்டுள்ளார். பின்னர் இருவரும் குழந்தையை தேடி உள்ளனர்.

அப்போது அவர்கள் கீழ் வீட்டின் படிக்கட்டுக்கு கீழ் தண்ணீர் தொட்டியை திறந்து பார்த்துள்ளனர். அதில்3மாதகுழந்தையான ஹர்பா பாத்திமா தண்ணீரில் மிதந்தாள். உடனடியாக அவர்கள் குழந்தையை மீட்டு ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்து விட்டு குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து அறிந்த ஆம்பூர் டவுன் போலீசார் விரைந்து வந்து குழந்தையின் உடலை மீட்டு விசாரணை நடத்தினர். பின்னர் உடலை பிரேத பரிசோதனைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து குழந்தையின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது போலீசாரின் கேள்விகளுக்கு அஸ்லியா தஸ்மின் பதில் சொல்லமுடியாமல் திணறினார். இதனால் அவரிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர்.

இதில் அவர் குழந்தையை கொன்றதை ஒப்புக்கொண்டார்.

அவர் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில், 3 குழந்தைகளை வளர்க்க முடியாததாலும் தூங்குவதற்கு கூட நேரம் இல்லாததாலும் மன உளைச்சல் காரணமாக 3வது குழந்தை ஹர்பா பாத்திமாவை கொலை செய்ய முடிவு செய்து தண்ணீர் தொட்டியில் வீசியதாகவும் அதில் குழந்தை மூச்சுத்திணறி இறந்து விட்டதாகவும் தெரிவித்தார். இதையடுத்து அஸ்லியா தஸ்மினை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

# கோப்பணம்பாளையம் சக்கரப்பட்டி சித்தரின் 13ஆம் ஆண்டு குருபூஜை விழா



நாமக்கல், நவ.27

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா கோப்பணம்பாளையம் பாண்டமங்கலம் செல்லும் சாலையில் சக்கரப்பட்டி சித்தர் (எ) சதானந்த சித்தரின் ஜீவ சமாதி சித்தர் பீடம் உள்ளது. இங்கு 13 ஆம் ஆண்டு குருபூஜை விழா நடைபெற்றது.

குரு பூஜையை முன்னிட்டு சக்கரப்பட்டி சித்தருக்கு காலை 7 மணிக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது . அதைத் தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டது. காலை 10 மணியளவில் கலசங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வேள்வி தொடங்கியது. 12.30 மணிக்கு கைலாய வாத்தியம், சங்கு நாதத்துடன் பூர்ணாஹுதி சமர்ப்பித்து வேள்வி பூஜை நிறைவு செய்யப்பட்டது.

இந்த சிறப்பு வழிபாட்டில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சக்கரப்பட்டி சித்தரை தரிசனம் செய்தனர். மதியம் 1 மணிக்கு 251 சாதுக்களுக்கு மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாட்டினை சக்கரப்பட்டி சித்தர் அன்பர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# சென்ட்ரல்-அரக்கோணம் மின்சார ரெயில் ரத்து



சென்னை, நவ.27

தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை சென்டிரல்அரக்கோணம் வழித்தடத்தில் உள்ள அரக்கோணம் பணிமனையில் இன்று (வியாழக்கிழமை) இரவு 11.30 மணி முதல் நாளை (வியாழக்கிழமை) காலை 2.30 மணி வரையில் (3 மணி நேரம்) பராமரிப்பு பணி மேற்கொள்ள இருப்பதால் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

★ மூர்மார்க்கெட்டில் (சென்னை சென்டிரல்) இருந்து இன்று (வியாழக்கிழமை) இரவு 10 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரெயிலும், அரக்கோணத்தில் இருந்து இன்றுஇரவு 9.45மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் மின்சார ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

★ மூர்மார்க்கெட்டில் இருந்து இன்று இரவு 10.55 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் பயணிகள் ரெயில் (வண்டி எண். 66009), திருவலங்காடு அரக்கோணம் இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு ரூ.860 கோடி பணப்பலன்கள் ஒதுக்கீடு: அரசாணை வெளியீடு

சென்னை, நவ.27

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி, ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்க வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, விடுப்பு சம்பளம், ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை போன்றவை, வழங்கப்படாமல் உள்ளன. இந்த பணப்பலன்களை வழங்கக்கோரி, போக்குவரத்து தொழிற் சங்கங்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி, 2024ம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பலன் வழங்க, ரூ.860 கோடியே 32 லட்சத்து 76 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து, தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு ரூ.104 கோடியே 4 லட்சத்து 28 ஆயிரமும், அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு ரூ.44 கோடியே 74 லட்சத்து 16 ஆயிரமும், விழுப்புரம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு ரூ.127 கோடியே 85 லட்சத்து 24 ஆயிரமும், சேலம் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.84 கோடியே 65 லட்சத்து 3 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, கோவை போக்குவரத்து கழகத்திற்கு ரூ.104 கோடியே 10 லட்சத்து 92 ஆயிரமும், கும்பகோணம் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.197 கோடியே 38 லட்சத்து 15 ஆயிரமும், மதுரை போக்குவரத்து கழகத்திற்கு ரூ.103 கோடியே 90 லட்சத்து 38 ஆயிரமும், திருநெல்வேலி போக்குவரத்து கழகத்திற்கு ரூ.93 கோடியே 64 லட்சத்து 60 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# சாலையில் நடந்து சென்ற பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற வாலிபர்

திருவள்ளூர், நவ.27

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஒன்றியம் தெக்ளூர் கிராமத்தை சேர்ந்தவர் 27 வயது பெண். இவர் கடந்த மே மாதம் 10ந் தேதி இரவு அதே பகுதியில் உள்ள தேவாலயத்திற்கு சென்று விட்டு தனது குழந்தையுடன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது அதே கிராமத்தைச் சேர்ந்த உறவினரான ஜனா (வயது 21) என்பவர் அந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றார். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அப்பெண், அலறினார். அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வருவதை கண்டவுடன் ஜனா அங்கிருந்து தப்பி சென்று விட்டார்.

இதுகுறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவாக இருந்த ஜனாவை நேற்று கைது செய்தனர். கைது செய்யப்பட்ட ஜனாதிருவள்ளூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# டெல்டா, கடலோர மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும் தமிழக அரசு எச்சரிக்கை



சென்னை, நவ.27

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த 24ந்தேதி குமரிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (நேற்று) இலங்கைக்கு தெற்கே வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளது.

இந்த தாழ்வுப்பகுதி மேலும் வலுவடைந்து தமிழ்நாட்டின் கடலோரமாக வடக்கு நோக்கி நகரக் கூடும் என்பதால் டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வருகிற 28ந்தேதி முதல் 30ந்தேதி வரை கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும். எனவே, தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும் வருவாய் நிர்வாக ஆணையர் சாய்குமார், சென்னை எழிலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை மையத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் கடலூர், மயிலாடுதுறை, நாகை, தஞ்சாவூர், திருவாரூர்மற்றும்புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர்களுடன் பேரிடரை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னெச்சரிக்கைகள் மற்றும் ஆயத்தநிலை குறித்து ஆய்வு செய்தார்கள்.

இதில், நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும், நேரடி கொள்முதல் மையங்களின் இருந்து அனைத்து நெல் மூட்டைகளையும் பாதுகாப்பாக நகர்வு செய்யுமாறும், கூடுதல் மின்கம்பங்கள், மின் வடங்கள் தயார்நிலையில் வைக்குமாறும், மீட்புப்படையினருடன் தயார்நிலை குறித்து ஆய்வு செய்யுமாறும் அறிவுரை வழங்கினார்கள்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள, தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 3 அணியினர் நாகை மாவட்டம் வேளாங்கண்ணியிலும், 2 அணியினர் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சிக்கு அருகிலும் மீட்பு மற்றும் நிவாரண பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலைநிறுத்தப்பட்டு உள்ளனர்.

மேலும், தேசிய பேரிடர் மீட்பு படையின்ஒரு அணி இன்று (வியாழக்கிழமை) முதல் விழுப்புரம் மாவட்டத்தில் நிலைநிறுத்தப்பட உள்ளது. கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# விழுப்புரம்: பஸ்சில் பெண் பயணியிடம் ரூ.15 லட்சம் நகைகள் திருட்டு

விழுப்புரம், நவ.27

சென்னை தாம்பரம் அருகே உள்ள பசுவஞ்சேரி பகுதியை சேர்ந்தவர் சிங்காரவேலன் மனைவி சுபாஷினி (வயது 45). இவர் விழுப்புரம் அருகே கோனூரில் நடந்த உறவினரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக தனது மகன் அனிஷ், மகள் நவ்யா ஆகியோருடன் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து அரசு விரைவு பஸ்சில் விழுப்புரத்திற்கு புறப்பட்டார். அவர் தன்னுடைய 18¼ பவுன் எடையுள்ள நகைகளை ஒரு பையில் வைத்துக்கொண்டு பஸ்சில் பயணம் செய்தார்.

இந்நிலையில் விழுப்புரம் நான்குமுனை சந்திப்பு மாம்பழப்பட்டு பஸ்நிறுத்தம் அருகில் பஸ்சில் இருந்து சுபாஷினி மற்றும் அவரது மகன், மகள் கீழே இறங்கினர். அப்போது தான் வைத்திருந்த பையை சுபாஷினி சரிபார்த்தபோது அதிலிருந்த நகைகள் காணாமல் போயிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். பஸ் பயணத்தின்போது யாரோ மர்மநபர்கள், சுபாஷினி வைத்திருந்த பையில் இருந்த நகைகளை திருடிச் சென்றிருப்பது தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.15 லட்சமாகும். இதுகுறித்து அவர் கொடுத்த புகாரின் பேரில் விழுப்புரம் மேற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து நகைகளை திருடிச்சென்ற மர்ம நபர்களை வலைவீசி தேடிவருகின்றனர்.

## ஜனவரி 6ந்தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம்: ஜாக்டோஜியோ அறிவிப்பு




சென்னை, நவ.27

பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் உள்ள ஊழியர்களை கால முறை ஊதியத்தில் வரன் முறைப்படுத்த வேண்டும். ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள், ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும். காலிப்பணியிடங்களை நிரப்பவேண்டும் என்பது உள்ளிட்ட 10அம்சகோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள், ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பானஜாக்டோஜியோ தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறது.

கோரிக்கைகளை வலியுறுத்தி எப்போதெல்லாம் ஜாக்டோஜியோ போராட்டம் நடத்துகிறதோ, அப்போதெல்லாம் அரசு அழைத்து பேச்சுவார்த்தை நடத்துகிறது. அதன்படி, கடந்த பிப்ரவரி 24ந்தேதி அமைச்சர்கள் கொண்ட குழு எங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது.

அதேபோல் மார்ச் 13 ந்தேதி முதல்அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தி 10 அம்ச கோரிக்கைகள் குறித்து விரிவாக பேசி ஜாக்டோ ஜியோ நிர்வாகிகளுக்கு நம்பிக்கை அளித்தார். ஆனாலும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. இதனையடுத்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், கடந்த 18ந்தேதி ஒரு நாள் வேலைநிறுத்த போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக என்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கலாம்? என்பது குறித்து ஆலோசிக்க ஜாக்டோஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மு. பாஸ்கரன், சே.பிரபாகரன், இலா. தியோடர் பாஸ்கரன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த கூட்டத்தின் முடிவில், அடுத்தகட்ட போராட்டமாக அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் 6ந்தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருப்பதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாக ஜாக்டோஜியோசார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி வட்டார அளவில் பிரசார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த மாதம் (டிசம்பர்) 13ந்தேதி மாவட்ட தலைநகரங்களில் உரிமை மீட்பு உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும்.

அதனைத்தொடர்ந்து அடுத்த மாதம் 27ந்தேதி மாவட்ட தலைநகரங்களில் வேலைநிறுத்த ஆயத்த மாநாடு நடத்தப்படும். பின்னர் அடுத்த ஆண்டு ஜனவரி 6ந்தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜார்ஜ் கோட்டையை பிடிப்பதே இலக்கு; செங்கோட்டையனை அல்ல: தமிழிசை கலகல பதில்



சென்னை, நவ.27

அதிமுக முன்னாள் அமைச்சரும் மூத்த தலைவருமான கே.ஏ.செங்கோட்டையன் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கினார். இதனால் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், அவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் செங்கோட்டையன் தூக்கி வீசப்பட்டார். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் 27ம் தேதி விஜய் முன்னிலையில் தவெகவில் இணையப்போவதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது.

இந்தநிலையில், சென்னையில் பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

கோவையில் முதல்அமைச்சர் திறந்துவைத்த செம்மொழி பூங்கா நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படவில்லை. இதை பாஜக செய்திருந்தால் விமர்சனம் செய்வார்கள். எத்தனை நாள் தமிழை வைத்து ஏமாற்றுவார்கள்? அன்பில் மகேஷ் பாடங்களை பார்க்கிறாரோ இல்லையோ, உதயநிதி பாடல் எழுதுகிறார்.

2 பெரிய கட்சிகளை வைத்து அரசியலை எதிர்கொள்கிறோம். ஒன்று மத்தியில் ஆண்டது. மற்றொன்று மாநிலத்தில் ஆள்வது என்றார்.

அதனை தொடர்ந்து, அதிமுகமுன்னாள்அமைச்சர் செங்கோட்டையன் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைகிறாரா? என்ற கேள்விக்கு பதில் அளித்த தமிழிசை சவுந்தரராஜன்,அண்ணன் செங்கோட்டையன்என்னசெய்கிறார் என்பதை பார்ப்பது எங்கள் வேலையல்ல. ஜார்ஜ்கோட்டையைப்பிடிப்பதே எங்கள் இலக்கு; செங்கோட்டையனை அல்ல என பதில் அளித்தார். தவெகவில் இணைவது குறித்த தகவலை செங்கோட்டையன், பன்னீர் செல்வம் மறுக்காத நிலையில் தமிழிசை கருத்து தெரிவித்துள்ளார்.

## நெல்லை மாவட்டத்தில் 46.42 சதவீதம் எஸ்.ஐ.ஆர். படிவங்கள் இணையதளத்தில் பதிவேற்றம்: கலெக்டர் தகவல்



திருநெல்வேலி நவ.27

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையமானது 11 2026ஐ தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தினை (எஸ்.ஐ.ஆர்.) மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. அதன்படி திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவங்களை BLO மொபைல் செயலில் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 கணக்கீட்டு படிவங்களைநிரப்பிவழங்கிட வாக்காளர்களுக்கு உதவி செய்யும் விதமாக இன்றைய தினம் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்கள் அமைந்துள்ள இடங்களில்உதவிமையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக திருநெல்வேலி மாவட்டத்தில் மானூர் வட்டம் வாகைகுளம் ஊராட்சி மற்றும் உக்கிரன்கோட்டை ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவங்களை BLO மொபைல் செயலில் பதிவேற்றம் செய்யும் பணி தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான சுகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர், திருநெல்வேலி மாவட்டத்தில் 24.11.2025 மாலை 4 மணி வரை 6 லட்சத்து 58 ஆயிரத்து 344 கணக்கீட்டு படிவங்கள், அதாவது 46.42 சதவீதம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நாளையும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் போன்ற இடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்,

மற்றும் தன்னாவலர்கள் மூலம் BLO மொபைல் செயலில் பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார்.

## வீட்டில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் மீண்டும் வீடு திரும்பிய செங்கோட்டையன்



சென்னை, நவ.27

அ.தி.மு.க. ஒன்றிணைவது சம்பந்தமாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. 2 பேரும் அவ்வப்போது அதுசம்பந்தமாக கருத்துகளை தெரிவித்து வந்தனர். இது அ.தி.மு.க.வில் பரபரப்பை ஏற்படுத்தி வந்தது.

அ.தி.மு.க. ஒன்றிணைய எடப்பாடி பழனிசாமிக்கு கெடு விதிப்பதாக கூறி செங்கோட்டையன் தெரிவித்தார். இதனால் செங்கோட்டையன் மற்றும் அவரது ஆதரவாளர்களின் கட்சி பதவிகளை பறித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார். இதனிடையே பசும்பொன்னில் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழா நடந்தது. இதில் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், டிடி.வி.தினகரன் ஆகியோரை செங்கோட்டையன் சந்தித்து பேசினார். அப்போது அவர், கட்சியை ஒருங்கிணைப்பது தொடர்பாக பேசியதாக நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

எனவே செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்குவதாக எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார். இந்தநிலையில் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் வருகிற 27ந் தேதி (நாளை) நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க.வில் இணைய உள்ளதாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவியது. இது அரசியல் வட்டாரத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் செங்கோட்டையன் நேற்று ஈரோட்டில் இருந்து சென்னைக்கு சென்றார். முன்னதாக கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், "50 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் ஏற்றதாழ்வுகளை சந்தித்து அ.தி.மு.க.வுக்காக உழைத்தேன். அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற பரிசுதான் அ.தி.மு.க.வில் இருந்து என்னைநீக்கியது. இதனால் மனவேதனையில் உள்ளேன் என்று கூறினார்.

இந்த நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள வீட்டில் இருந்து புறப்பட்ட செங்கோட்டையன் கால் மணி நேரத்தில் மீண்டும் வீடு திரும்பியுள்ளார். தவெக தலைவர் விஜய்யை செங்கோட்டையன் இன்று சந்திக்கஉள்ளதாககூறப்படும் நிலையில், வீடு திரும்பியது பரபரப்பாக பேசப்படுகிறது. அதிமுக கொடி கட்டாத காரில் செங்கோட்டையன் வெளியே சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து செங்கோட்டையன் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இன்று ராஜினாமா செய்ய உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக சட்டப் பேரவை செயலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## கள்ளக்காதலர்களை சேர்த்து வைத்த பெண் சப்இன்ஸ்பெக்டர்; 4 குழந்தைகள் பரிதவிப்பு

திண்டுக்கல் நவ.27

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரைச் சேர்ந்தவர் வைஷ்ணவி (வயது 22). இவர் தனது தாய் மாமனை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஊரில் நடந்த திருவிழாவுக்கு திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யா(24) என்பவர் வந்துள்ளார். இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர்.

திருவிழாவில் சந்தித்துக் கொண்ட இவர்கள் பழக்கம் நட்பாக வளர்ந்தது. நாளும், மாதமும் கடந்த சென்ற போது இருவரின் நட்பும் ஆழமானது, செல்போனில் தொடர்ந்து பேசி வந்துள்ளனர். இது குறித்து வைஷ்ணவியின் வீட்டுக்கு தெரிய வரவே அவரது கணவர் மற்றும் குடும்பத்தினர் கண்டித்துள்ளனர்.

இருந்தபோதும் கேட்காமல் அவர்கள் தங்கள் கள்ளத் தொடர்பை வளர்த்து வந்தனர். இதே போல் சூர்யா வீட்டிலும் இந்த விவகாரம் தெரிய வரவே அங்கு தகராறு வெடித்தது. இதனால் கள்ளக்காதல் ஜோடிகள் 2 பேரும் தங்கள் குடும்பத்தனரையும், குழந்தைகளையும் மறந்து வீட்டை விட்டு வெளியேறி திருப்பூரில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர்.

இது குறித்து இருவரது குடும்பத்தினர் சார்பில் வேடசந்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப பட்டது. வேடசந்தூர் டி.எஸ். பி. பவித்ரா தலைமையில் தனிப்படை அமைத்து அவர்களை தேடி வந்தனர். திருப்பூரில் பதுங்கி இருப்பது தெரிய வரவே அங்கு சென்ற போலீசார் அவர்களை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். சப்இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி அவர்களிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.

இதனிடையேதனதுமனைவிபோலீஸ்நிலையத்துக்கு வந்ததை அறிந்து வைஷ்ணவியின் கணவர் மற்றும் குடும்பத்தினர் அங்கு வந்தனர். இதே போல் சூர்யாவின் குடும்பத்தினரும் போலீஸ் நிலையத்துக்கு வந்தனர். அவர்கள் சூர்யா மற்றும் இது வைஷ்ணவியிடம் இது போன்ற செயலில் ஈடுபடக் கூடாது என்றும் குழந்தைகளுக்காக குடும்பத்துடன் சேர்ந்து வாழுமாறு தெரிவித்தனர். ஆனால் அதைக் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை. சப்இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமியிடம் வைஷ்ணவி தனக்கு கணவருடன் செல்ல விருப்பம் இல்லை என்றும், சூர்யாவுடன் செல்லவே விரும்புவதாகவும் கூறினார். இதனையடுத்து அவர்களை அங்கிருந்து சப்இன்ஸ்பெ க்டர் அனுப்பி வைத்தார்.

வேடசந்தூர், வடமதுரை போலீஸ் நிலையங்களில் அடிக்கடி காதல் ஜோடிகள்தங்கள்வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொள்வது வழக்கம். பின்னர் அவர்கள் போலீஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து அனுப்பி வைக்கப்படு வார்கள். அது போல கள்ளக்காதல் ஜோடிகளை போலீசாரே குடும்பத்துடன் சேர்த்து வைக்காமல் அனுப்பி வைத்தது இரு குடும்பத்தினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த செயலால் அவர்களது 4 குழந்தைகளும் தற்போது பரிதவித்து நிற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. மாவட்ட எஸ்.பி. இது போன்ற குடும்ப நல பிரச்சினைகளில் எவ்வாறு முடிவெடுப்பது என்பது குறித்து போலீசாருக்கு உரிய பயிற்சி வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட நபர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பராமரிப்பு பணி: குருவாயூர் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரெயில்கள் தாமதம்




மதுரை, நவ.27

திருவனந்தபுரம் ரெயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட ஆலப்புழை மற்றும் ஓசிரா ரெயில் நிலையங்களில் உள்ள பராமரிப்பு பணிமனைகளில் சீரமைப்பு பணி நடந்து வருகிறது. இதற்காக அந்த பாதையில் இயக்கப்படும் பல்வேறு ரெயில்களின் இயக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் ராமேசுவரத்தில் இருந்து மதுரை வழியாக திருவனந்தபுரம் வரை செல்லும் அம்ரிதா எக்ஸ்பிரஸ் ரெயில் (வ. எண்.16344) நேற்று சுமார் 2 மணி நேரம் தாமதமாக இயக்கப்பட்டது.

குருவாயூரில் இருந்து மதுரை வழியாக நேற்று சென்னை சென்ற எக்ஸ்பிரஸ் ரெயில் (வ. எண்.16128) 2 மணி நேரம் தாமதமாக சென்றது. இந்த ரெயில் விருதுநகரில் இருந்து மதுரை வழியாக செல்வதற்கு பதிலாக அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை வழியாக திருச்சிக்கு இயக்கப்பட்டது. மறுமார்க்கத்தில் சென்னைகுருவாயூர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வ. எண்.16127) நேற்று 2½ மணி நேரம் தாமதமாக சென்றது. இதன் காரணமாக மேற்கண்ட ரெயில்களின் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

## காதலிக்க மறுத்த பெண்ணை தாக்கிய கல்லூரி மாணவர் கைது

சென்னை, நவ.27

சென்னை பரங்கிமலை பெண்கள் தங்கும் விடுதியில் தங்கி தனியார் கல்லூரியில் படித்து வரும் 20 வயது இளம்பெண் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அதே கல்லூரியில் படிக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த ராஜிக் முகமது (20) என்பவருடன் பழகி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த தகவல் அப்பெண்ணின் பெற்றோருக்கு தெரியவரவே ராஜிக் முகமதுவிடம் பழகுவதை நிறுத்துமாறு கண்டித்துள்ளனர். இதனால் மாணவி ராஜிக் முகமதுவிடம் பழகுவதை நிறுத்தி உள்ளார்.

இந்த நிலையில் கல்லூரி முடித்து, ஆலந்தூர் ரெயில்வே நிலையம் சாலை வழியாக அந்த பெண் நடந்து சென்றுகொண்டிருந்தபோது ராஜிக் முகமது, மீண்டும் தன்னிடம் பழகுமாறு கூறி வற்புறுத்தி தாக்கியதாக தெரிகிறது. இது குறித்த புகாரின்பேரில் பரங்கிமலை போலீசில் வழக்குப் பதிவு செய்து ராஜிக் முகமதுவை கைது செய்தனர்.

## தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரன் திடீர் டெல்லி பயணம்

சென்னை, நவ.27

தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரன் மாவட்டவாரியாக சுற்றுப் பயணம் செய்து வருகிறார். நேற்று தேனியில் சுற்றுப் பயணம் செய்தார். இந்த நிலையில் அவரை உடனடியாக டெல்லி வருமாறு கட்சி மேலிடம் அழைத்துள்ளது. இதையடுத்து மதுரையில் இருந்து இன்று காலை டெல்லி புறப்பட்டு சென்றார்.டெல்லியில்கட்சியின்தேர்தல்அதிகாரிபாண்டாமற்றும்மேலிட தலைவர்களை சந்திக்கிறார். மத்திய மந்திரி அமித்ஷா விரைவில்தமிழகம் வரவிருக்கிறார். அதற்குள்கூட்டணி விவகாரங்களை பேசி முடிவு செய்ய திட்ட மிட்டு உள்ளார்கள். இது தொடர்பாக ஆலோசிப்ப தற்காகவே அவர் டெல்லி சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

அ.தி.மு.க. கூட்டணியில் டி.டி.வி. தினகரன், ஓ பன்னீர் செல்வம் ஆகியோரை இணைப்பதில் உள்ள பிரச்சினைகள், பா.ஜனதாவுக்கான தொகுதி பங்கீடுகள் உள்ளிட்ட சில முக்கிய பிரச்சினைகள் பற்றி மேலிட தலைவர்கள் விவாதிக்க இருப்பதாக கூறப்படுகிறது. செங்கோட்டையன் திடீரென்று த.வெ.க.வில் சேர எடுத்துள்ள முடிவும் டெல்லி தலைமைக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது. எனவே மற்ற கட்சிகள், கூட்ட தலைவர்களை ணிக்குள் கொண்டு வர டெல்லி தலைமை விரும்புகிறது.

இது தொடர்பாக நயினார் நாகேந்திரனிடம் விவாதிக்க இருப்பதாக கூறப்படுகிறது. எப்படியும் இந்த மாத இறுதிக்குள் கூட்டணிக்கு இறுதி வடிவம் கொடுக்க டெல்லி தலை வர்கள் முடிவு செய்துள்ள தாகவும் இந்தவிவாதங்களில் தொடரும் சிக்கல்களை களைவதற்கான முடிவை எடுப்பார்கள் என்றும் தெரிகிறது.

## பயணியிடம் ரூ.60 லட்சம் கொள்ளை வழக்கு: 2 போலீஸ்காரர்கள் பணியிடை நீக்கம்




திருச்சி, நவ.27

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வளையம்பட்டி அருள்நகரை சேர்ந்தவர் ஆரோக்கியஜான்கென்னடி (வயது 32). கடந்த மாதம் 30ந் தேதி சென்னையில் இருந்து பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.60 லட்சத்துடன் திருச்சி வந்தார். திருச்சி ஜங்ஷன் ரெயில் நிலையத்தில் இவரிடம் போலீஸ் என்று கூறி ரூ.60 லட்சத்தை ஒரு கும்பல் கொள்ளையடித்து சென்றது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் இதுகுறித்து ஜங்ஷன் ரெயில்வே போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் 2 போலீஸ்காரர்கள் உள்பட 4 பேர்அவரிடம் பணத்தை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது. இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக திருச்சி ரெயில்வே போலீஸ்காரர்களான ஜான்சன் கிரிஸ்டோகுமார் (43), தீனதயாள் (37) மற்றும் திருவெறும்பூரை சேர்ந்த ரஞ்சித் (40), ராஜேந்திரன் (45) ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

பின்னர்4 பேரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தநிலையில்ரெயில்வே போலீஸ்காரர்கள் ஜான்சன் கிறிஸ்டோகுமார், தீனதயாள் ஆகிய 2 பேரையும் பணியிடை நீக்கம் செய்து திருச்சி ரெயில்வே போலீஸ் சூப்பிரண்டு ராஜன் உத்தரவிட்டுள்ளார்.

## ஓடும் பஸ்சில் பெண் சப்இன்ஸ்பெக்டரிடம் நகை, பணம் திருட்டு



சிவகங்கை, நவ.27

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் புதூரை சேர்ந்தவர் செல்வம். இவருடைய மனைவி ஆனந்தவல்லி (வயது 45). இவர் மதுரை தெப்பக்குளம் போலீஸ் நிலையத்தில் போக்குவரத்து போலீஸ் சப்இன்ஸ்பெக்டராகபணியாற்றி வருகிறார். இவர் திருப்புவனத்தில் இருந்து மானாமதுரையில் நடந்த ஒரு திருமணத்திற்கு சென்றார். பின்னர் அங்கிருந்து டவுன் பஸ்சில் ஊருக்கு சென்றார்.

பின்னர் பர்சை ஆனந்தவல்லி பார்த்தபோது திறந்து இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். அதில் இருந்த 3 பவுன் தங்க நகை, ரூ.5 ஆயிரம், ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள செல்போன் திருட்டு போனது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், மானாமதுரை போலீஸ்நிலையத்தில் புகார் செய்தார். இதன் பேரில் போலீசார்விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253



# தவெகவில் இணைகிறேனா? மறுக்காத செங்கோட்டையன்

கோவை, நவ.27

அதிமுக முன்னாள் அமைச்சரும் மூத்த தலைவருமான கே.ஏ.செங்கோட்டையன் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கினார். இதனால் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், அவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் செங்கோட்டையன் தூக்கி வீசப்பட்டார். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் 27ம் தேதி விஜய் முன்னிலையில் தவெகவ்ல் இணையப்போவதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது. மேலும் சில முக்கிய பிரமுகர்கள் சேருவார்கள் என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில், கோவையில் செங்கோட்டையன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

50 ஆண்டுகள் அதிமுகவில் உழைத்த நான், மன வேதனையில் இருக்கிறேன். எனது மன வேதனை அனைவருக்கும் நன்றாக தெரியும். 50 ஆண்டுகாலமாக அதிமுகவுக்காக உழைத்த எனக்கு தரப்பட்ட பரிசு அடிப்படை உறுப்பினர் பதவி நீக்கம். அதிமுகவில் இருந்து உறுப்பினர் நீக்கத்தால் அடைந்த மனவேதனையில் உள்ளேன். நீங்கள் (கே.ஏ.செங்கோட்டையன்) தவெகவில் இணைய உள்ளதாக தகவல்கள் பரவி வருகிறதே என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர் அதற்கு அவர் பதில் அளிக்காமல் சென்றுவிட்டார்.

# வெடிகுண்டு வழக்கில் தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்த போலீசார்: தூத்துக்குடி எஸ்.பி. பாராட்டு

தூத்துக்குடி நவ.27



தூத்துக்குடி சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பண்டாரம்பட்டி பகுதியில் வைத்து கடந்த 9.10.2025 அன்று அதிக சத்தத்துடனும், புகை மற்றும் நெடியுடனும் வெடிக்கக்கூடிய வெடிகுண்டை சட்டவிரோதமாக தயாரித்து, அதை வெடிக்க செய்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய வழக்கில் தூத்துக்குடி அத்திமரப்பட்டி பகுதியைச் சேர்ந்த அந்தோணி மகன் குருஸ் அம்புரோஸ் (வயது 19) மற்றும் திருநெல்வேலி வி.எம்.சத்திரம் பகுதியைச் சேர்ந்த சண்முகவேல் மகன் நாகூர்பாண்டியன்(25) ஆகிய 2 பேர் தலைமறைவாக இருந்து வந்தனர்.

இதனையடுத்து தூத்துக்குடி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. சுதீர் மேற்பார்வையில், சப்இன்ஸ்பெக்டர்கள் சுப்புராஜ், ஜெஸ்லின், தலைமை காவலர் பேச்சிமுத்து மற்றும் காவலர்கள் மீனாட்சிசுந்தரம், மருதுபாண்டியன் ஆகியோர் அடங்கிய போலீசார் மேற்சொன்ன தலைமறைவான குற்றவாளிகளை பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு கடந்த 19.11.2025 அன்று மேற்சொன்ன 2 பேரையும் கைது செய்தனர். மேற்சொன்னவாறு சட்ட விரோதமாக வெடிகுண்டு தயாரித்து வெடித்த வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்து சிறப்பாக பணிபுரிந்ததற்காக மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் இன்று மேற்சொன்ன போலீசாருக்கு வெகுமதி வழங்கி பாராட்டினார்.

# மது குடிக்க மனைவி பணம் தர மறுத்ததால் உப்பள காவலாளி தற்கொலை

தூத்துக்குடி ரோச் பூங்கா எதிரே, முனியசாமி கோவில் அருகில் உள்ள உப்பளத்தில் தலவாணி முத்து மகன் மாடசாமி (வயது 70) என்பவர் காவலாளியாக வேலைபார்த்துவந்தார். இவரது மனைவி சின்னம்மா. இருவரும் கடந்த 13 ஆண்டுகளாக அப்பகுதியில் வசித்து வந்துள்ளனர். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். அவர்கள் திருமணமாகி தனியே வசித்து வருகின்றனர். இந்த நிலையில் மாடசாமிக்கு மதுபழக்கம் இருந்துள்ளது. நேற்று மது குடிப்பதற்காக மனைவியிடம் பணம் கேட்டுள்ளார். அவர் பணம் இல்லை என்று கூறினாராம். இதனால் மன வேதனையில் மாடசாமி அங்குள்ள கொடுக்காப்புளி மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து அவரது மனைவி அளித்த புகாரின் பேரில் தென்பாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 8 வயது சிறுமியிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்ட முதியவருக்கு 20 ஆண்டுகள் சிறை



திருநெல்வேலி நவ.28

திருநெல்வேலி மாவட்டம் வி.கே.புரம், கட்டப்புளியை சேர்ந்த பாபநாசம் (வயது 75) என்பவர் கடந்த 2024ம் ஆண்டு 8 வயது சிறுமியிடம் பாலியல்தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில், காவல்துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, பாபநாசத்தை கைது செய்தனர்.

புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து வழக்கின் விசாரனையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி சுரேஷ்குமார் இன்று (25.11.2025) குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் அவர் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்து, சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வனிதா, அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர்கள், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் உஷா ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால் போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 26 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. 2025ம் ஆண்டில் மட்டும், இதுவரை 25 போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 26 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடத்தக்க வகையில், ஒரு குற்றவாளிக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஒரு சரித்திர பதிவேடு குற்றவாளி உட்பட 3 பேருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஒரு சரித்திர பதிவேடு குற்றவாளிக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனையும், 4 பேருக்கு ஆயுள் தண்டனையும் பெற்று தரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அவர்களுக்கெதிராக குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது தனிப்பட்ட கவனத்துடன் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (27.11.2025)




புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.




உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.




சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.




வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.




தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.




நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.




புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.




உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.




வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.




அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.




புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.




மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# தூத்துக்குடியில் பைக் திருடர்கள் 3 பேர் கைது: பைக் மீட்பு

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு அருகே உள்ள சவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன் மகன் வேல்முருகன் (வயது 32). தளவாய்புரத்தில் இவரது பைக் திருடு போய்விட்டதாக கயத்தாறு போலீசில் புகார் செய்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் கயத்தாறு சப்இன்ஸ்பெக்டர் சிலுவை அந்தோணி மற்றும் போலீசார் செட்டிகுறிச்சி பகுதியில் ரோந்து சென்றபோது 3 பேரைசந்தேகத்தின்பேரில்விசாரித்தனர்.

அதில் அவர்கள் திருநெல்வேலி கிருஷ்ணாபுரம் செல்வலட்சுமிநகர் முருகன் மகன் இசக்கிமுத்து(20), தூத்துக்குடி மாவட்டம் மாப்பிள்ளையூரணி லட்சுமணன் மகன் காளிமுத்து(21), சவேரியார்புரம் வடக்கு தெருவைச் சேர்ந்த அருள்ராஜ் மகன் கிறிஸ்டோபர்(எ) மதியழகன்(32) என்பதும், அவர்கள் வைத்திருந்த பைக் வேல்முருகனின் பைக் என்பதும் தெரிய வந்தது.



இதனையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்து பைக்கை பறிமுதல் செய்தனர். பின்னர் கோவில்பட்டி ஜே.எம். 2 கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த 3 பேர் மீதும் திருநெல்வேலியில் 10க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# 'ஜனநாயகன் படத்தில் நடிக்க நிறைய முயற்சி செய்தேன்' நடிகர் முனீஸ்காந்த்



'சூது கவ்வும்', 'முண்டாசுப்பட்டி', 'ஜிகர்தண்டா', 'டார்லிங்2', 'மாநகரம்', 'டிடி ரிட்டன்ஸ்', 'கேங்கர்ஸ்' போன்ற பல படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்தவர், முனீஸ்காந்த். நகைச்சுவையில் அசத்தி வந்த முனீஸ்காந்த் தற்போது 'மிடில் கிளாஸ்' என்ற படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

கடந்த 21ந் தேதி திரையரங்குகளில் வெளியான இப்படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதற்கிடையில் ஒரு நேர்காணலில் பேசிய முனீஸ்காந்த் , ஜனநாயகன் படத்தை மிஸ் செய்ததாக தெரிவித்தார். அவர் கூறுகையில்,

``ஜனநாயகன் படத்தில் நடிக்க நிறைய முயற்சி செய்தேன். அந்த இயக்குனரை பார்த்து வாய்ப்பு கொடுங்கள் என கேட்டேன். விஜய்யின் கடைசி படம் இது. கூட்டத்தில் நிற்பது மாதிரியாவது ஒரு காட்சி வையுங்கள் என கேட்டேன். அவர் சரி என சொல்லி எனக்கு ஒரு கதாபாத்திரமும் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் வேறு ஒரு படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதால் நடிக்க முடியாமல் மிஸ் செய்து விட்டேன். வருத்தமாக இருக்கிறது''என்றார்.

ஜன நாயகன் படம் ஜனவரி 9ம் தேதி திரைக்கு வர உள்ளது. இதில், பூஜா ஹெக்டே, பிரகாஷ் ராஜ், நரேன், கவுதம் மேனன், மமிதா பைஜு உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படத்தை எச்.வினோத் இயக்கி உள்ளார்.

# நானியின் 'ஜெர்சி' படத்தை மிஸ் பண்ண நடிகை யார் தெரியுமா?



நடிகர்நானிஉதவிஇயக்குநராகதனதுதிரைப்படப் பயணத்தைத் தொடங்கினார்.. இப்போது அவர் ஒரு நட்சத்திர ஹீரோவாக தனக்கென ஒரு இமேஜை உருவாக்கி வைத்துள்ளார். வித்தியாசமான படங்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ச்சியான வெற்றிகளுடன் வலம் வருகிறார்.

'ஜெர்சி' திரைப்படம் நானியின் கெரியரில் சிறந்த படங்களில் ஒன்றாகும். 2019 இல் வெளிவந்த இந்தப் படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. இந்தப் படத்தில், நானிக்கு ஜோடியாக ஷ்ரத்தா ஸ்ரீநாத் நடித்திருந்தார். ஆனால், ஷ்ரத்தா ஸ்ரீநாத் இந்தப் படத்திற்கு முதலில் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இந்தப் படத்திற்கு முதலில் ரெபா மோனிகா ஜான்தான் கதாநாயகியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அப்போது அவர் தமிழ் மற்றும் மலையாளத்தில் ஒரே நேரத்தில் தொடர்ச்சியான படங்களில் நடித்து வந்ததால், இந்தப் படத்தை மறுத்திருக்கிறார். பின்னர், அவருக்குப் பதிலாக ஷ்ரத்தா ஸ்ரீநாத் நடித்தார்.

ஜெர்சி படத்தில் நானியின் மனைவியாகவும், ஒரு குழந்தைக்குத் தாயாகவும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி அனைவரையும் கவர்ந்தார் ஷ்ரத்தா ஸ்ரீநாத். இந்தப் படத்திற்குப் பிறகு ஷ்ரத்தாவுக்கு வாய்ப்புகள் கிடைத்தாலும், அங்கீகாரம் கிடைக்கவில்லை.

# அனஸ்வராவின் 'சாம்பியன்'...'கிரா கிரா ஜிங்கிராகிரே' பாடல் வெளியீடு




மகாநதி, சீதா ராமம் போன்ற கிளாசிக் படங்களை தயாரித்த ஸ்வப்னா சினிமா தற்போது ஸ்ரீகாந்தின் மகன் ரோஷன் நடிப்பில் 'சாம்பியன்' என்ற படத்தைத் தயாரித்து வருகிறது.

இதில் , கதாநாயகியாக மலையாள நடிகை அனஸ்வரா நடிக்கிறார். இதன் மூலம் அவர் தெலுங்கில் அறிமுகமாகிறார். இப்படத்தில் அவர் சந்திரகலா என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படம் அடுத்த மாதம் 25ம் தேதி திரைக்கு வருகிறது.

இந்நிலையில், இப்படத்திலிருந்து 'கிரா கிரா ஜிங்கிராகிரே' பாடல் வெளியாகி உள்ளது. இப்பாடலை ராம் மிரியாலா பாடியுள்ளார். தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் பிரதீப் அத்வைதம் இயக்கும் இப்படத்திற்கு மிக்கி ஜே மேயர் இசையமைத்துள்ளார்.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2வது டெஸ்ட்: வரலாறு படைக்குமா இந்திய அணி..?



இந்தியா தென் ஆப்பிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடந்து வருகிறது. இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 489 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக செனுரன் முத்துசாமி சதம் (109 ரன்) அடித்தார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சில் விளையாடிய இந்திய அணி 83.5 ஓவர்களில் 201 ரன்னில் ஆல்அவுட் ஆகி பாலோஆன் ஆனது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 58 ரன்கள் அடித்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் மார்கோ ஜான்சன் 6 விக்கெட்டுகளை அள்ளினார்.

அடுத்து இந்தியாவுக்கு பாலோஆன் வழங்காமல் 288 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 78.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 260 ரன்கள் அடித்த நிலையில் டிக்ளேர் செய்தது. இதன் மூலம் இந்திய அணிக்கு 549 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக ஸ்டப்ஸ் 94 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் ஜடேஜா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 549 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற மெகா இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்க்தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ஜெய்ஸ்வால் 13 ரன்களிலும், கே.எல். ராகுல் 6 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். 4வது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 15.5 ஓவர்களில் 27 ரன்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து திணறி வருகிறது. சுதர்சன் 2 ரன்களுடனும், குல்தீப் 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி வெற்றி பெற இன்னும் 522 ரன்கள் அடிக்க வேண்டும். மறுபுறம் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற 8 விக்கெட்டுகள் வீழ்த்த வேண்டும். இத்தகைய சூழலில் நாளை 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

முன்னதாக ஆசிய மைதானங்களில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் இதுவரை எந்த அணியும் 400+ ரன்களை சேசிங் செய்து வென்றதில்லை. கடந்த 2021ம் ஆண்டு சட்டோகிராமில் நடைபெற்ற ஒரு டெஸ்டில் வங்காளதேசத்திற்கு எதிராக வெஸ்ட் இண்டீஸ் 395 ரன்களை எட்டி பிடித்ததே ஆசிய மண்ணில் ஒரு அணி சேசிங் செய்த அதிகபட்ச இலக்காக இருந்து வருகிறது.

அந்த வரலாற்றை மாற்றி தென் ஆப்பிரிக்கா நிர்ணயித்துள்ள 549 ரன்களை வெற்றிகரமாக சேசிங் செய்து இந்தியா புதிய வரலாறு படைக்குமா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# சென்னையில் ஆசிய கோப்பை சைக்கிளிங் போட்டி

இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சம்மேளம் சார்பில், தமிழக அரசு ஆதரவுடன் 5வது உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் அடுத்த மாதம் (டிசம்பர்) 9ந் தேதி முதல் 14ந் தேதி வரை நடக்கிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ மால் மற்றும் நேரு பார்க்கில் உள்ள இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியில் நடைபெறும் இந்த போட்டியில் நடப்பு சாம்பியன் எகிப்து, இந்தியா, ஈரான், ஜப்பான், மலேசியா, தென்கொரியா, ஹாங்காங், சீனா, தென்ஆப்பிரிக்கா, போலந்து, சுவிட்சர்லாந்து, பிரேசில் ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்த போட்டிக்கான இந்திய அணியில் அனாஹத் சிங், ஜோஸ்னா சின்னப்பா, அபய் சிங், வேலவன் செந்தில் குமார் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். டெல்லியை சேர்ந்த அனாஹத் சிங் தவிர மற்ற மூவரும் தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த போட்டிக்கான இலச்சினை அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடந்தது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா கலந்து கொண்டு இலச்சினையை அறிமுகம் செய்து வைத்தார்.

# உலகக் கோப்பை செஸ்: இறுதிசுற்றின் 2வது ஆட்டமும் 'டிரா'



11வது உலகக் கோப்பை செஸ் தொடர் கோவாவில் நடந்து வருகிறது. இதில் வெய் யி (சீனா), ஜவோகிர் சிந்தாரோவ் (உஸ்பெகிஸ்தான்) இடையிலான இறுதிசுற்றின் முதலாவது ஆட்டம் சமனில் முடிந்தது. இதன் 2வது ஆட்டத்தில் நேற்று மீண்டும் மோதினார்கள். வெள்ளைநிற காய்களுடன் ஆடிய வெய் யி 30வது நகர்த்தலில் மறுபடியும் 'டிரா' செய்தார். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க இன்று டைபிரேக்கர் நடக்கிறது.

முன்னதாக 3வது இடத்துக்கான ஆட்டத்தில் ரஷியாவின் ஆந்த்ரே இசிபென்கோ 2‑0 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் யாகுப்போவை வீழ்த்தி 3வது இடத்தை பிடித்தார். வெய் யி, ஜவோகிர், இசிபென்கோ ஆகியோர் இந்த போட்டியின் மூலம் கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.